# சிறுவர் போசனைக் குறைவை ஒழிப்பதில் பராமரிப்பின் பங்கு

துஷன்தி பெரேரா, மற்றும் ஜீவிகா வீரஹேவா.
விவசாய பொருளாதாரம் மற்றும் வர்த்தக முகாமைத்துவத் திணைக்களம், விவசாய பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## சுருக்கம்

போசனைக் குறைபாடானது பல நாடுகளிற்கு தமது அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஒரு அச்சுறுத்தக் கூடிய பிரச்சினையாக இருந்து வருகின்றது. இலங்கையில் முன்பள்ளி சிறார்களிடையே நிலவும் போசனைக் குறைவு நிலையானது அடிப்படையிலும் மிகவும் பலவீனமானதாகும் எனக் கருதப்படுகின்றது. இவ்வாய்வின் பொதுமைப்பாடான குறிக்கோளானது சிறுவர் போசனைக் குறைவை ஒழிப்பதில் பராமரிப்பின் பங்கினை மதிப்பிடுவதாகும். இதன் குறுகிய குறிக்கோள்களாவன:

(1) முன்பள்ளி சிறுவர்களுடைய போசனைக் குறைவின் நிலையை ஆராய்தல்.
(2) பராமரிப்பினை அளவிடுவதற்காக ஒரு சுட்டியை விருத்தி செய்தல்.
(3) Probit ஆய்வொன்றினைப் பயன்படுத்தி பராமரிப்பு மற்றும் சிறுவர் போசனைக் குறைபாடு இடையிலான தொடர்பொன்றை நிறுவுதல்
(4) பராமரிப்பின் முன்னேற்றத்தினூடாக சிறுவர்கள் சிறந்த போசாக்கினைப் பெற்றுக் கொள்வதிலான வாய்ப்புக்களை எதிர்வுகூறல் என்பனவாகும்.

பேராதனைப் போதனா வைத்தியசாலையில் 80 பராமரிப்பாளர்கள் மற்றும் அவர்களது முன்பள்ளி சிறார்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சிறுவர் போசாக்கின்மையின் நிலவுகையானது நிறைகுறைவு மற்றும் குறல் நிலைமை எனும் சுட்டிகளினூடாக மதிப்பிடப்பட்டது. தாயிற்கான பராமரிப்பு, சுகாதார மற்றும் சுத்தம் தொடர்பான பராமரிப்பு, உணவூட்டல் மற்றும் உணவு தயாரிப்பிலான பராமரிப்பு என்பன உள்ளடங்களாக பராமரிப்பினை மூன்று உப பிரிவுகளில் சுட்டி அளவிட்டது. நிறைகுறைவு மற்றும் குறை வளர்ச்சி நிலைமையின் நிலவுகையானது முறையே 20% மற்றும் 22.5% ஆக காணப்பட்டது. பெறுபேறுகள் மருத்துவ வசதிகளிற்கான தூரம், பிறப்பு நிறை மற்றும் உயரம், பால், சிறுவர்களின் சுகாதார நிலை மற்றும் பராமரிப்பு என்பன ஒரு சிறுவனின் நலனில் குறிப்பிடத்தக்க அளவு தாக்கம் செலுத்துவதாக சுட்டிக்காட்டின. இதனைத் தொடர்ந்து ஒரு விருத்தியான பராமரிப்பு சுட்டியினைப் பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு குறித்த பராமரிப்பு கூறிற்கும் ஒரு கூட்டல் பெறுமானத்தை வழங்குவதனூடாக தற்போதைய பராமரிப்பு மட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. இவ்விருத்தி செயப்பட்ட பராமரிப்பு சுட்டியுடன் நிறைகுறைவு மற்றும் குறை வளர்ச்சி நிலைமைகளிலான விகிதமானது முறையே 3.75% மற்றும் 6.25% இற்கு குறைக்கப்படும். பெறுபேருகளிலிருந்து பராமரிப்பு என்பது சிறுவர் போசாக்கினைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணி எனவும் சிறுவர்களிலான பராமரிப்பினை முன்னேற்றுவதானது நற்பயனைத் தரக்கூடிய விளைவுகளை உருவாக்கும் என்பதுவும் தெளிவாகின்றது. இதன் படி தாய்மார்களிற்காக சமுதாய புரிந்துணர்வு மற்றும் அறிவினை முன்னேற்றுவதற்கு போசாக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்வது ஒரு அறிவுரையாக வழங்கக் கூடியதாகும். இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களின் பொருத்தப்பாடு மற்றும் ஏற்றுக் கொள்ளப்படும் தன்மை தொடர்பாக ஆராயவும் இவற்றிலான ஒரு ஆழ்ந்த அறிவினை பெற்றுக் கொள்ளவும் செலவு வினைத்திறனான ஆய்வினைச் செய்வது பெறுமதி வாய்ந்ததாகும்.